# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, மாச்சு மாதம் 09 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்டி) 01/2005*

### ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக் காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் குறிக்கோள்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன், அது கூட்டிணைக்கப்படவென விண்ணப்பித்துள்ள தாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றதைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஸ்ரீ சாரானந்த அபிவிருத்தி மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும்

அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகிறது :—

(அ) மன்ற உறுப்பினர்களின் சமூக, கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்தலும் நலனோம்பு வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) கங்காராம மஹா விகாரையின் பழமைபேணி மறுசீரமைப்பை மேற்கொள்வதுடன் ஸ்ரீ சாரானந்த பிரிவேன, சமயப் பாடசாலை, பாலர் பாடசாலை, தொழிற்பயிற்சிப் பிரிவு என்பவற்றை பேணுவதுடன் அவற்றை மேம்படுத்தலும் ;

(இ) கங்காராம மஹா விகாரையின் பழைய கட்டிடத் தொகுதியான, விசேடமாக விகாரை மண்டபம், மூன்றுமாடி சொற்பொழிவு மண்டபம், சீமா மண்ட பம், வதிவிட மண்டபம் ஆகியவற்றின், புதிய தேவைக ளுக்கேற்ப வளவுகளினுள் கட்டிடங்களை நிறுவுதலும், வணக்கத் திருத்தலங்களை திருத்துவதற்கும் ஸ்தானங் களை மேம்படுத்தவும், மற்றும் காணி காப்பிற்கும் அதன் அழகிற்கும் அவசியமான ஒழுங்குகளை மேற் கொள்ளல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை தவிசாளர், உப தவிசாளர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமைய தேர்ந் தெடுக்கப்படும் ஐந்துக்குக் குறையாத உறுப்பினர்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழு ஒன்றினால் இச்சட்டத்தினது ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கும் அமைவாக நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்ற நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5.** (1) இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய பின்வருவனவற்றைச் செய்ய கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) ஏதேனும் கொள்வனை, அளிப்பு, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவை மூலமாக அல்லது வேறு வகையில் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாகும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், கைமாற்றுதல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை கொண்டு நடாத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், சேவையில் ஈடுபடுத்தல், அவர்களுக்கு ஊதியம் வழங்கல், அவர்கள் விடயமாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும், அவர்களைச் சேவையிலிருந்து நிறுத்துதல் ;

(ஈ) உள்ளூர் அல்லது வெளிநாடுகளிலிருந்து காசாகவோ அல்லது பொருட்களாகக் கிடைக்கப்பெறும் அளிப்புகள், கொடைகள், நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(உ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், மூடுதல், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றிப் பணங்களைக் கடனாகப் பெறுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதிகள் நிறைவேற்றுக் குழு தீர்மானிக்கும் அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக இடைநேர்விளைவானதும் உகந்ததுமான ஏனைய எல்லாச் செயல்களையும் புரிதல்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**6.** (1) பின்வருவன கூட்டுத்தாபனத்தின் நிதியத்துள் அடங்குதல் வேண்டும் :—

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று மன்றத்தின் வரவில் இருக்கும் எல்லாப் பணங்களும் அத்திகதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்பட்டனவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்கு திரளக்கூடிய எல்லாப் பணங்களும்.

(2) கூட்டுத்தாபன நிதியின் வரவில் உள்ள எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் அதன் குறிக்கோள்களை எய்துவதிலும் உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத உறுப்பினர்கள் கொண்டு பின்வரும் கருமங்கள் தொடர்பில் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்துடனும் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்தல், நியமித்தல் அல்லது பெயர் நியமனம் செய்தல் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், அவர்களின் பதவிக்காலம்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள், கூட்டம் இடம் பெறும் நேரம், இடம், அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(ஈ) நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களின் தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் , அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுதல் வேண்டும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவானது கூட்டுத் தாபனத்தின் வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப் படும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கூட்டுத்தாப னத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**9.** கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் சரி, இதன் கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்கிலாபம், பணிக்கொடை அல்லது வேறுவகையில் இலாபமென்ற வகையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பி னர்களுக்குச் செலுத்தப்படுதலோ மாற்றப்படுதலோ ஆகாது. *கூட்டுத்தாபனத்தின் வருமானத்தையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.*

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இதனால் தாபிக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுத லும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நா ளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவு தொகைகள் ஆகி யனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், தவிசாளர், செயலாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமை களையேனும், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமை களையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளோரினதும் அவர்களுக்காக அவர்கள் சார்பில் அவர்களின்கீழ் கோருவோரும் தவிர வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப் படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்